[28th July 1965

Minister's Tours in Kerala.

* 12 *Q.*—Sri S. J. RAMASWAMI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any Travelling Allowance was drawn by Ministers for tours in Kerala in February and March 1965; and

(*b*) if so, the amount drawn by each Minister?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) No.

(*b*) Does not arise.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, கேரளத்தில் தேர்தல் நடந்த காலத்தில் அமைச்சர்கள் அங்கே சென்றிருக்கிறார்கள். அதற்காக பயணப்படி வாங்கினார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பயணப்படி சர்க்காரிடத்தில் வாங்கப்பட்டதா என்பது கேள்வி. இல்லை என்று பதில் சொன்னேன். வேறு என்ன விவரம் வேண்டுமென்று தெரியவில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, சர்க்காருடைய காரில் அங்கே போனதாகத் தகவல் வந்திருக்கிறது. அந்தக் காரை உபயோகித்தது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினருக்கு என்ன என்ன தகவல்கள் வந்திருக்குமோ எனக்குத் தெரியாது. என்னிடத்தில் அம்மாதிரி தகவல் இல்லை.

கும்பகோணத்தில் ஜரிகை உற்பத்தி

* 13. *கேள்வி.*—திரு. கோ. சி. மணி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா, குடந்தை பொது மக்களிடமிருந்து அங்கு ஒரு ஜரிகை உற்பத்தி தொழிற்சாலை நிறுவ வேண்டும் என்று கோரி அண்மையில் மகஜர் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) No.

(*b*) Does not arise.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பட்டு ஜவுளி அதிகமாக உற்பத்தி செய்கிற காரணத்தால் வேறு எங்கேயாவது ஒரு உற்பத்தி சாலையைத் துவக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு ஜரிகை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையை அமைக்கவேண்டுமென்று நாம் இப்போது திட்டம் தயார் செய்துகொண்டு வருகிறோம்.

28th July 1965]

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் ஆரம்பிக்க இருக்கும் இந்தத் தொழிற் சாலையை எந்த மாவட்டத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக் கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

Match factories

* 14 Q.—Sri M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of Government match factories in the State; and

(*b*) the amount invested and the persons employed in each of them?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Nil.

(*b*) Does not arise.

தஞ்சை மாவட்டத்தில் உணவு உற்பத்தித் திட்டம்

* 15 கேள்வி.—திரு. ஆ. ரு. சுப்பையா: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் 1965–66-ம் ஆண்டில் என்னென்ன வேலைகள் எடுத்துக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது?

கனம் திரு. பூ. கக்கன் : விசேஷ சிறு பாசனத்தின் கீழ் நிறை வேற்றப்படுகிற பாசன வேலைகளை கனம் அங்கத்தினர் குறிப்பிடு கிறார் என்று நினைக்கிறேன். 1965–66-ல் 154 வேலைகளை நிறை வேற்றத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

It is presumed that the Member refers to irrigation works carried out under Special Minor Irrigation Programme. One hundred and fifty-four works are programmed for execution in 1965-66.

திரு. எஸ். முருகையன் : அதிலே வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை வேலைகள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : திரு. சுப்பையா அவர்கள் கேட்டது தஞ்சை ஜில்லாவைப்பற்றியது.

திரு. க. ர. நல்லசிவம் : இதன் மூலமாக எத்தனை ஏக்கர் வசதி பெற இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இது சம்பந்தமான புள்ளிவிவரம் என்னிடம் இல்லை கண்மாய்களைப் பழுதுபார்த்தால், வாய்க்கால்